(இ) ஆம் எனில், அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒட்டப்பிடாரம் வெக்காவாய் உயர்நிலை ஆரம்பபள்ளி நிர்வாகியால் நடத்தப்பட்டுவரும் இண்டர்பெய்த் குழந்தைகள் இல்லம் திருநெல்வேலி முதன்மைக்கல்வி அலுவலரால் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியில் தணிக்கை செய்யப்பட்டது. ஆனால் உணவு, உடை சம்பந்தமாக ஊழல் எதும் கண்டுபிடிக்கப்படவில்லை. வேறு பல ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(இ) திருநெல்வேலி மாவட்டக் கல்வி அதிகாரி முதன்மைக்கல்வி அலுவலரால் கண்டு பிடிக்கப்பட்ட ஒழுங்கீனங்கள் குறித்து ஒரு அறிக்கை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அது பெறப்பட்டதும் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, அந்த அறிக்கை எப்போது அளிக்கப்படும ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பணியாளர் வருகைப் பதிவேட்டில் 1971-ம ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை கையெழுத்துப் போடப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை சம்பளப் பட்டியலில் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் தேதி வரையில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டப்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ந் தேதி வரையில் பணியாளர்கள் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதுபற்றி தலைமை கல்வி அதிகாரியிடம் அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்தவுடன் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வேம்பார்பட்டி ஊராட்சி

*651 வினு—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வேம்பார்பட்டி (திண்டுக்கல் வட்டம்) கிராமப் பஞ்சாயத்தை ஒரு நகர பஞ்சாயத்து ஆக்க அரசு நடவடிக்கை விரைந்து எடுக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. க. நாகராஜன் : தலைவரவர்களே, இந்த வேம்பார்பட்டியை நகரப் பஞ்சாயத்தாக ஆக்காவிட்டாலும் கூட, அங்கே ஒரு வாரச் சந்தை இருக்கிறது. அதை தனியார் நடத்தி வருகிறார்கள். பஞ்சாயத்தே ஏற்று நடத்தினால் நல்ல லாபம் கிடைக்கும். எனவே, அதைப் பஞ்சாயத்தே ஏற்று நடத்துவதற்கு அரசாங்கம் அறிவுரை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 23

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றி, அந்த ஊராட்சியே தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசாங்கத்திற்கு அனுப்புவார்களானால், அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்.

Separate convict wards in headquarters hospitals

* 652 Q.—Dr. H. V. HANDE:
Thiru K. A WAHAB: } Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to construct convict wards in all the district headquarters hospitals; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) குற்றவாளிகளுக்கு என்று மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் தனி வார்டுகள் திட்ட கிரமமாக அமைக்கப்பட்டுவருகின்றன. சேலம், திருச்சி, நாகர்கோவில் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டுகள் உள்ளன.

நீலகிரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டு கட்ட 1971-ல் உத்திரவு அளிக்கப்பட்டு வேலை நடந்து கொண்டு இருக்கின்றது.

1972–73-ல் இராமநாதபுரம், நாகப்பட்டினத்திலுள்ள தலைமை மருத்துவ மனைகளில் குற்றவாளிகளுக்கென்று தனி வார்டுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. எ. வகாப்: புகழ்பெற்ற சிறைச்சாலைகள் இருக்கிற வேலூர் பாளையங்கோட்டை போன்ற இடங்களிலும் உள்ள ஆஸ்பத்திரிகள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பட்டியலில் இல்லை. அந்த இடங்களில் உள்ள மருத்துவமனைகளிலும் தனி வார்டு அமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கூடுமானவரையில் எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும தனி வார்டுகள் அமைக்கப்படவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. ஆண்டுக்கு இரண்டு இரண்டு இடங்களாக எடுத்துத்தான் நிறைவேற்றப்படும்.

வேலூரிலுள்ள சி. எம். சி. மருத்துவ மனை

*653 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் சி. எம். சி. ஆஸ்பத்திரிக்கு சென்ற ஆண்டு தமிழ்நாடு அரசால் கடனும், மானியமும் எவ்வளவு வழங்கப்பட்டது ?

(இ) அவை ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றனவா ?